# வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விவகாரம் விளக்கமறியல் கைதிகளில் ஐவர் உண்ணாவிரதம்



வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், தமக்கு நீதி கோரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் ஐவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆலயத்துக்குள் நுழைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வழிபாட்டில் ஈடுபட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்தனர்.

அவர்களை கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில்விசாரணைகள்நிறைவுபெறாத காரணத்தால் நேற்று (12) வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்நிலையில், நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நேற்று காலை 9 மணி முதல் மூன்று தடவைகள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களைச் சந்தேகநபர்கள் சேதப்படுத்தினர் என்று 2 ➤


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 30 புதன்கிழமை 13.03.2024 கதிர் 201







## நாராஹேன்பிட்டியில் நகர அபிவிருத்தி அதிகார சபை காணியை 50 வருட குத்தகைக்கு வழங்க அரசு தீர்மானம்

### அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

நாராஹேன்பிட்டி, கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியை சுகாதாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகள் அபிவிருத்தி திட்டத்திற்கென 50 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியானது நைன்வெல்ஸ் ஹொஸ்பிட்டல் லிமிடெட் மற்றும் எக்ஸஸ் இன்டெர்நெஷனல் பிரைவேட் லிமிடெட் ஆகியன ஒன்றிணைந்து நிறுவியுள்ள நிறுவனத்திற்கு 50 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங் கப்படும் என அமைச்சரவை 2 ➤ ச்சாளர்



## கனடா செல்லவுள்ள அநுரவுடன் அந்நாட்டு தூதர் இன்று சந்திப்பு



இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்க்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்

## எம்.ஏ. சுமந்திரன் எம்.பி சென்றதற்கும் கூட்டமைப்பிற்கும் சம்பந்தமில்லை!

### கோவிந்தன் கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனிப்பட்ட ரீதியில் சர்வதேச நாணய நிதியத்தின்திட்டங்கள்தொடர்பாக ஜனாதிபதி ஏற்பாடு செய்த கூட்டத்திற்குச் சென்று இருக்கலாம். எனவே, அவர் கூட்டத்திற்குச் சென்றதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை, என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார். 2 ➤



### ஐ.தே.க. வுக்கு 40 லட்சம் வாக்குகள் உள்ளதாம்!

## ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகார ஆலோசகர் கூறுகிறார்



ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது நாற்பது இலட்சம் வாக்குகள் உள்ளதாக அக்கட்சியின் மினுவங்கொட தொகுதி அமைப்பாளரும் ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஆலோசகருமான அஸ் மாரசிங்ஹ தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் மொத்த வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கை தமது கட்சி எட்டிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2 ➤

## வாள்வெட்டில் உயிரிழந்த இளைஞனை கடத்திச் சென்ற கார் கண்டுபிடிப்பு!

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் வாள்வெட்டில் உயிரிழந்த இளைஞனை கடத்திச் செல்லப் பயன்பட்ட கார் இரத்த கறைகளுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த காரில் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் பொல்லுகள், இரும்பு கம்பிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ள.

யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் குறித்த கார் நேற்று நள்ளிரவு வட்டுக்கோட்டை பகுதியில் சந்தேக நபரொருவரின் காணியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டறியப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள காரை தடயவியல் பொலிஸார் சோதனை செய்ததுடன் இரத்த மாதிரிகளையும் சேகரித்திருந்தனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்கள் நேற்று கிளிநொச்சிப் பகுதியில் பதுங்கியிருந்த வேளையில் யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். வட்டுக்கோட்டை அராலிப் பகுதியைச் சேர்ந்த 37, 32,25, 22 வயதானவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டதுடன் சந்தேகநபர்களிடம் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேக நபர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் இன்று மாலை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட மேலும் சிலரைத் தேடி பொலிஸார் விசாரணைகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

காரைநகருக்குச் சென்று விட்டு வட்டுக்கோட்டை திரும்பும்போது இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு வாள்வெட்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டு, இறக்கவிடப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார். 2 ➤

## ரொபர்ட் பயஸ், முருகன், ஜெயக்குமார் இலங்கைத் தூதரகத்தில் முன்னிலை

### பலத்த பாதுகாப்புக்கு மத்தியில்!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட முருகன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் தமக்கான கடவுச்சீட்டு பெறுவதற்காக சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட மூவருக்கும் இலங்கைத் தூதரகத்தில் இன்று புதன்கிழமை நேர்காணல் நடைபெற்றுள்ளது. மூவரையும் அங்கு அழைத்துச் செல்வதற்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகத் தெரியவந்தது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்திருந்த மனுவில், 'என்னுடைய கணவர் முருகனும் நானும் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புகிறோம். எனவே, எனது கணவர் முருகன் சென்னையில் உள்ள 2 ➤

# சிவலிங்கத்தைச் சுற்றியிருக்கும் வெள்ளை நாகத்தின் காணொளி

## சமூக வலைத்தளங்களில் வைரல்



யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு - காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள சிறு கோயிலில் சிவலிங்கத்தை வெள்ளை நாகம் சுற்றியிருக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை தெற்கு பகுதியில் உள்ள தகரங்களால் வேயப்பட்ட சிறு கோயிலிலேயே குறித்த காணொளி இராணுவத்தினரால் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் சிறு அம்மன் கோயிலில் பிள்ளையார், சிவலிங்க உருவச் சிலைகளும், இலட்சுமியின் உருவப்படமும் வைத்துக் காணப்படுகின்றன.

பௌர்ணமி தினங்களில் பாம்புகள் அடிக்கடி அந்த ஆலயத்துக்கு வந்துள்ளன என்று தெரிவிக்கும் இராணுவத்தினர், அவ்வாறு ஒருமுறை வந்தபோதே குறித்த காணொளி எடுக்கப்பட்டது என்றும் கூறியுள்ளனர்.

குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி பலராலும் பகிரப்பட்டு வருகின்றது. (அ)

## எம்.ஏ. சுமந்திரன் .......

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தனது காரியாலயத்தில் நேற்று நடத்திய ஊடகச்சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், இந்த நாடு தற்போதும் பொருளாதார ரீதியில் உலகத்தில் இருந்து அந்நியப்பட்டிருக்கின்றது. எனவே, இந்த நாட்டு நிலைமையை உணர்ந்து கொள்ளாமல் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறை தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிவராத்திரி இந்துக்களுக்கு ஒரு முக்கியமான தினம். சிவபெருமான் இந்துக்களின் முதல் முதல் கடவுள். இந்த நிலையில், சிவராத்திரிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உட்பட ஆலய குரு மற்றும் பக்தர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளதுடன், சிலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தொல்பொருள் திணைக்களம் என்ற போர்வையில் எங்கள் பிரதேசங்கள் பல கபளீகரம் செய்ப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில் வெடுக்குநாறி மலையும் கபளீகரம் செய்யப்பட்டு வருகிறது, என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நேரத்தில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும், வடக்கு கிழக்கில் அமைதியைக் கொண்டு வரவேண்டும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும்.

புலம் பெயர் தேசத்தில் இருக்கின்ற தமிழ்த் தனவந்தவர்கள் இலங்கையில் வந்து முதலிடவேண்டும் என அரசாங்கமும் ஜனாதிபதியும் வாய்கிழியக் கூறிக் கொண்டு, மறைமுக நிகழ்ச்சி நிரலில் வடக்குக் கிழக்கில் தமிழினத்தின் கலை கலாசாரத்தை ஒழிக்க நடாத்தும் ஒரு வேலைத்திட்டமாக இந்த வெடுக்குநாறிச் சம்பவத்தைப் பார்ப்பதாகவும் கோவிந்தன் கருணாகரம் மேலும் குறிப்பிட்டார். (04)

## அநுரகுமார .......

அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் அலுவலகத்தின் இரண்டாவது செயலாளர் (அரசியல்) பெற்றிக் பிக்கரிங்கும், தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் விஜித ஹேரத்தும் பங்கேற்றனர்.

இதன்போது இன்றளவில் இலங்கையில் நில வுகின்ற சமூக பொருளாதார மற்றும் அரசியல் நிலை மை பற்றி விரிவான உரையாடல் இடம்பெற்றது.

தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய மக்கள் சக்தியின் திட்டங்கள் பற்றியும் இரு தரப்பினருக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாற்றிக்கொள்ளப்பட்டன.

கனடாவில் வசிக்கின்ற இலங்கையரைச் சந்திப்பதற்கான அநுரகுமார திஸாநாயக்கவின் கனடா விஜயத்துக்கு நல்வாழ்த்துக்களையும் இதன்போது தூ துவர் தெரிவித்தார். (அ)

## வாள்வெட்டில் .....

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 23 வயதான தவச்செல்வம் பவிதரன் என்பவரே குறித்த சம்பவத்தில் உயிரிழந்திருந்தார். (01)

## ஜனாதிபதியின் .....

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிய எழுச்சி ஏற்பட்டுள்ள- தாகத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த பெருமளவானோர் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

புத்தி ஜீவிகள், நாட்டின் கீழ் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்பதாகவும், தமது பிள்ளைகளின் எதிர்கால- த்தை ஜனாதிபதியால் மட்டுமே சிறப்பாக அமைத்திட முடியும் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும், நாற்பத்து மூன்று இலட்சம் பாடசாலை மாணவர்க- ளின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்பார்களாயின் அவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு தெரிவு இருக்க மாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-38)

## ரொபர்ட் பயஸ்....

இலங்கைத் தூதரகத்துக்குச் சென்று நேர்காணலில் கலந்து கொள்வதற்கான அனுமதியை வழங்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும். அங்கு சென்று வருவதற்கு பாதுகாப்பு தேவைப்படும் பட்சத்தில், உரிய பாதுகாப்பு வழங்க காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும்’ என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது, முருகன் கடவுச்சீட்டு பெறுவதற்கான நேர்காணலில் பங்கேற்க இலங்கை துணை தூ தரகத்திடம் முன் அனுமதி பெற திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

முருகனைத் தவிர முகாமில் இருக்கும் ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரும் கடவுச்சீட்டு பெறுவதற்காக அழைத்துச் செல்லவேண்டுமெனக் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இதன்படி இன்று திருச்சி முகாமில் இருந்து புறப்பட்டு காலை 11.30 மணியளவில் சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்துக்கு அவர்கள் மூவரும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். (04)

## வெடுக்குநாறிமலை.....

மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். இதனையடுத்து மேற்படி 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள இவர்களை இன்று காலை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் விளக்கமறியலில் உள்ளவர்களின் உறவினர்கள் பார்வையிடச் சென்றிருந்தனர். இதன்போதே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 8 நபர்களின் ஐவர் நேற்றுக் காலை தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறிப்பாக நேற்றுக் காலை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்படும்போதே அவர்கள் உணவை எடுத்திருக்கவில்லை. இந்நிலையில், இன்றைய தினமும் அவர்கள் உணவை உட்கொள்வதற்கு மறுத்துள்ளனர்.

ஆலயப் பூசகர் மதிமுகராசா, திலகநாதன் கிந்துஜன், சுப்பிரமணியம் தவபாலசிங்கம், துரைராசா தமிழ்ச்செல்வன், விநாயகமூர்த்தி ஆகிய ஐந்து பேரும் நேற்றுக் காலையிலிருந்து நீதி கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (அ)

## நாராஹேன்பிட்டியில்....

பந்துல குணவர்தன அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இது தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. திட்டம் தொடர்பான முதலீட்டு முன்மொழிவுகளை முன்வைத்து அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை ஒருமித்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெம-39)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

## புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்களால் இளம்தளிர் உதவும் கரங்கள் அமைப்பு உருவாக்கம்!




யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் 2002 ஆம் ஆண்டு உயர்தரப்பிரிவு பழைய மாணவர்களால் வறுமை நிலையில் இருக்கும் மாணவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் இளம்தளிர் உதவும் கரங்கள் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறை, விளையாட்டுத்துறை மற்றும் கல்வி சார்ந்த பலதுறைகளிலும் உதவிகளை வழங்குவதற்கு இந்த அமைப்பு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மாணவர்களுடைய முயற்சிக்கு யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபரான பெனார்ட் அடிகளார் முழுமனதுடன் பாராட்டுக்களை தெரிவித்ததுடன் அவர்களுக்கு ஆதரவு வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

## அலுவலக முகாமைத்துவ போட்டியில் பாலம் போட்டாறுக்கு 3ஆம் இடம்!



(ஹஸ்பர் ஏ.எச்)

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடையே திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட 2022 - 2023 ம் ஆண்டின் அலுவலக முகாமைத்துவம் தொடர்பிலான போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவு 3ம் இடத்தை தனதாக்கியது.

குறித்த கிராம சேவகர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.தங்கரூபன் இதற்கான விருதினை நேற்று மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற நிகழ்வின் போது பெற்றுக் கொண்டார்.

மாவட்ட மட்டத்தில் ஆறாம் இடத்தினையும் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவின் புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரேம் குமார் தனதாக்கினார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரளவிடமிருந்து விருதினை தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி இதன்போது பெற்றுக் கொண்டார்.

மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் மற்றும் ஏனைய பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் உடனிருந்தனர்.



# மிதி வெடி

*அம்புனிற் றாவின் கன்றோ ரபாயத்தி னூடுபோகிச்*
*செம்பொனின் றேர்க்கான் மீது விசையினாற் செல்லப்பட்டே*
*உம்பரி னடையக் கண்டங் குருகுதா யலமந்தோடி*
*வெம்பிடு மலறுங் சோரு மொய்ந்நடுக் குற்று வீழும்.*




மநு நீதிச் சோழன்ர காலத்தில ஒரு பசுவுக்கு நடந்த சோகத்த சேக்கிழார் எப்பிடிச் சொல்லுறார் பாருங்கோ? பசுவுக்கு நடந்த அநீதிக்காகத் தன் மகனையே பலி கொடுத்த மன்னன் எங்க, ஆராச்சி மணி அடிச்சாலும் ஏனெண்டு கேக்காத நம்மட ஆக்கள் எங்க? இங்க என்ன தான் தாம், தூம் எண்டு கத்தினாலும், தந்தநத்தோம் ஆடினாலும் ஆகிறது ஒண்டுமில்ல.....

நாளைக்கு விடிஞ்சால் பெரிய பள்ளிக் கூடத்தில கொண்டாட்டம்! அது தான் பாருங்கோ பட்டமளிப்பு விழா.... கஸ்ரப்பட்டுப் படிச்சு, நேர்மையான வழியில "பாஸ்" பண்ணுற ஒவ்வொரு பிள்ளைக்கும் வாழ்க்கையில மறக்க முடியாத ஒரு திருநாள் எண்டு சொல்லாம். வாயைக் கட்டி, வயித்தைக்கட்டித் தன்ர பிள்ளையப் பட்டதாரியாப் பாக்கவேணும் எண்ட ஒவ்வொரு பெற்றோருக்கும் அது இன்னுமொரு மகப்பேறு. அப்படிச் சந்தோசப்படுற அளவுக்கு மற்றத் தாய், தகப்பன் எல்லாம் கொண்டடேக்க... அநியாயமாப் பாதிக்கப்பட்டுப் போய் நிக்கிற பிள்ளையளின்ட தாய், தகப்பனிண்டை மனங்கள் என்ன பாடுபடும்?

இப்ப அங்க ஆட்சிக் கதிரையில இருக்கிறவர் பதவிக்கு வந்தாப்பிறகு வருசத்தில ரெண்டு "கொன்வக்கேஷன்". படிச்சுப் போட்டுப் பட்டச் சான்று கிடைக்காமல் ஒரு "பட்ச்" கூட இல்லை எண்டுற நிலமை.....

உந்தாள் பதவிக்கு வந்த நாளில இருந்து "பொம்பிளைப் பிள்ளையளை உரஞ்சிற" கனபேர் அடக்கி வாசிக்கத் தொடங்கீற்றினம். அடுத்த ரெண்டு வருசத்தில அந்தாள் போகட்டும் எண்டு பாத்துக் கொண்டிருப்பினம் போல...?

அந்தாள் வந்த பிறகுதான் விரிவுரையாளர் நியமனங்கள் ஓரளவுக்கு நேர்மையா நடக்குதெண்டு கேள்வி... அந்தக் காலத்தில வீட்டுக்குப் போய் "விருந்து" வைச்சவைக்கும், விதம் விதமாய் - இதம் பதமாய், பார்த்துப் பாராமல் அள்ளி இறைச்சவைக்கும் தானே நியமனங்கள் குடுபட்டது.

எல்லாத்தையும் விட, உள்ளகம் - வெளியகம் எண்ட வேறுபாடு இல்லாமல் செய்யப்பட்டது பெரிய விசியம் பாருங்கோ.... முந்தி எண்டால் வெளிவாரியாப் படிச்ச பிள்ளையள் ஏதோ தீண்டத் தகாதவ எண்டுமாப் போல.... ஒரு "ஸ்ரெப்" தள்ளித்தான் வச்சிருந்தவை. வெளிவாரியாகப் படிக்கலாம்.... பட்டம் எடுக்கலாம்... ஆனா அவையளுக்குக் "கொன்வக்கேஷன்" இல்லை. "கொன்வக்கேஷன்" அண்டு கடைசி அமர்வில அவையளிண்ட பெயரை வாசிச்சு விடுறதோட சரி....

இந்தாள் பதவிக்கு வந்த நாளில இருந்து பட்டதாரிகள் எண்டா எல்லாரும் சமமெண்டு "கொன்வக் கேஷன்"க்குக் கூப்பிட்டுப் பட்டம் குடுபடுகுது. உது அங்க உள்ள கனபேருக்குப் பிடிப்பில்லப் பாருங்கோ.... கம்பசில இப்ப கொஞ்சந்தன்னும் நீதியா நடக்குது எண்டு நானும் நம்பிக் கொண்டு தான் இருந்தனான். ஆனா அந்தாள் செய்யுற அத்தனை நல்லதையும் கெடுக்குமாப் போல சில அதிகாரிகள் நடந்து கொள்ளுறதால அந்தாளுக்கும் கெட்ட பேர்.

நடக்கிற அநியாயங்களத் தட்டிக் கேட்டால் பெட்டிப் பாம்பாய் அடங்க வேண்டிய நிலமை. மநு நீதிச் சோழன்ர வாசலில போய் நிண்டு நீதி கேட்ட தாய்ப் பசுவைப் போலப்... போய் நாலு வார்த்தை கேக்க ஏலாமல் நிக்குதுகள் கனக்கத் தாய், தகப்பன் மார்.....

வெளிவாரிப் பிள்ளையளையும், உள்வாரிப் பிள்ளையளா மதிச்சுச் சம அந்தஸ்துக் குடுத்து அந்தாள் பட்டமளிப்புச் செய்ய, வெளிவாரி அலகில கன காலத்துக்கு முன்னமே "பாஸ்" பண்ணின பிள்ளையளுக்குப் பட்டம் குடுபடாமல் கிடக்குதாம்.... அதைச் சொல்லப் போனால்.... "பேசாமல் இருந்து போட்டு அடுத்த வருசமாவது பட்டத்தை வாங்கிற வழியப் பாருங்கோ..... அங்கின இங்கின எண்டு போனியளோ வாழ்க்கையில பட்டம் எடுக்க மாட்டியள்" எண்டு அங்க இருக்கிற "அம்மணி"மார் வகுப்பெடுக்கினமாம்.

கிட்டத்தட்ட பத்து வருசத்துக்கு முன்னமே எல்லாப்பாடமும் "பாஸ்" பண்ணின பல பேருக்கு இன்னமும் "அவார்ட் ஒஃப் டிக்கிறி" குடுபடேல்ல. வெளிவாரித் துறைக்கெண்டு ஒரு பணிப்பாளர், அவருக்குக் கீழ அஞ்சாறு அடிப் பொடிகள் - பிரதிப் பணிப்பாளர்கள் எண்ட பேரில.... ஒருத்தரும் தங்கட கடமையச் சரியாச் செய்யுறேல்லப் போல....

இப்ப "கொன்வக்கேஷன்" அறிவிக்கப்பட்ட உடன பாதிக்கப்பட்ட பிள்ளையள் வந்து விசியத்தைச் சொல்லி இருக்கினம்.... அதைக் காதோட காது வைச்சது போல அமத்திப் போட்டினம் அங்க இருக்கிற ஆக்கள்....

அதைவிட இன்னுமொரு சம்பவம் வேற, வெளிவாரிப் பிரிவில பட்டம் எடுத்த பிள்ளை ஒண்டு தன்ர "ஸ்ரேற்மென்ற்" எடுக்கிறதுக்காகக் கனடாவில இருந்து 10 லட்சம் சிலவழிச்சு வந்து போன சம்பவமும் இருக்குது பாருங்கோ.... வழக்கமா, படிச்ச பிள்ளையள் "ஸ்ரேற்மென்ற்" எடுக்கிறதெண்டா அதுக்குரிய கட்டணத்தைக் கட்டிப் போட்டு, கடிதம் ஒண்டு அனுப்பினால், அவையள் சொல்லுற முகவரிக்கு "ஸ்ரேற்மென்ற்" ஐ அனுப்புவினம். அது தான் நடைமுறை.

ஆனா இந்தப் பிள்ளை கனடாவில இருந்து காசைக் கட்டிப் போட்டுக் கடிதமும் அனுப்பிப் போட்டு இருந்திருக்கு... ரெண்டு... வருசத்துக்கு மேலா இங்கயிருந்து ஒரு பதிலுமில்லை.... சரி நீங்கள் "ஸ்ரேற்மென்ற்"ஐத்தான் அனுப்ப வேண்டாம், பிள்ளை அனுப்பிற கடிதங்களுக்காவது பதிலைக் குடுக்கலாம் தானே? அதுவும் இல்லை.... ஆத்தாக் கொடுமையில அந்தப் பிள்ளை மனுசன்காரனையும் கூட்டிக் கொண்டு "பிளைட்" பிடிச்சு அங்க இருந்து இங்க நேரில வந்து இறங்கீற்று....

இங்க வந்து வெளிவாரி அலகில போய்க் கேட்டால் "உங்கட பைஃல்" எங்களிட்ட இல்லை... அதைத் தான் தேடிக் கொண்டு இருக்கிறம்... கிடைச்சால் "ஸ்ரேற்மென்ற்" தருவம்...." - இது அங்க இருந்தவை சொன்ன பதில்.

பாவம் அந்தப் பிள்ளை. அது ஒரு பிள்ளைப் பூச்சி. ஒண்டும் பறையேல்ல...

கூட வந்த மனுசனுக்குக் கொஞ்சம் கடுப்பாகிட்டுது. "பைஃல் இல்லாமலோ அவா படிச்சு முடிச்சவா....? "பைனல் இயர்" வரையும் "எக்ஸாம்" எழுதியிருக்கிறா.... ஒவ்வவொரு "எக்ஸாம்"க்கும் "அட்மிசன் கார்ட்" நீங்கள் தான் குடுத்திருக்கிறியள்.... "எக்ஸாம்" முடிஞ்ச பிறகு "ரிசல்ட்" வந்திருக்குது. நீங்கள் குடுத்த "ரிசல்ட் சீற்" எங்களிட்ட இருக்குது. "பைஃல்" மட்டும் எப்பிடி இல்லாமல் போனது? நாங்கள் என்ன கனடாவுக்கே கொண்டு போனனாங்கள்? என்ன பொறுப்பில்லாமல் கதைக்கிறியள்?" எண்டு புகைஞ்சு தள்ளிப் போட்டார்.

வழக்கம் போல "பேசாமல் இருந்தால் கொஞ்சக் காலம் பிந்தி எண்டாலும் "ஸ்ரேற்மென்ற்" கிடைக்கும். சத்தம் போட்டால் வாழ்க்கையில கிடையாது" எண்டு அங்க இருந்த அம்மணி அதட்டியிருக்கிறா பாருங்கோ....

ஆனாலும் அந்தாள் விடேல்ல... மனுசன் அங்கத்தை "அலுமினி" போல... "கம்பஸ்" கட்டமைப்புகள் கொஞ்சம் தெரிஞ்சவர். பதிவாளர் வாழ்க்கைப்பட்ட இடத்தில தான் அவர் பிறந்திருக்கிறார்.... துணைவேந்தரில இருந்து அங்கத்தை ஆக்கள் கனபேரோட அறிமுகம் இருக்காம்.... நேராப் பதிவாளருக்கு முன்னால போய் இருந்திட்டார்....

உடனடியாக் காரியத்தில இறங்கின பதிவாளர், வந்தவைய இருத்தி வைச்சபடி, அரை மணித்தியாலத்தில அவயின்ர பிரச்சினையைத் தீர்த்து, "ஸ்ரேற்மென்ற்"ஐக் கையில குடுத்திருக்கிறார்..... "எக்ஸாம்" எடுத்திருந்தா... "மார்க்ஸ்" பதிஞ்ச பதிவிருக்கும் தானே? அதை வைச்சுப் பாடங்களையும், "ரிசல்ட்"ஐயும் பதிஞ்சு குடுக்கிறதுக்கு அவ்வளவு அளப்பறை?

அப்பப் பாருங்களன், அரை மணித்தியால வேலையை வருசக் கணக்கில வைச்சு இழுத்தடிச்சவையை என்னெண்டு சொல்லுறது....?

அது வேற ஒண்டும் இல்லப் பாருங்கோ... அவையளுக்கு அந்தளவு "பொறுப்புணர்வு" - வேலையில "விசுவாசம்" .... வேற எண்னெண்டு சொல்லுறது?

ஆரவாரமா, ஆள், படை, அம்பு, சேனை - கொடி குடை ஆலவட்டத்தோட "கொன்வக்கேஷன்" செய்யுறதில விசியமில்லப் பாருங்கோ.... ஆட்சிக்குள்ள இருக்கிற அத்தனை பேருக்கும் சமநீதி கிடைக்குதா எண்டும் பாக்க வேணும். தன்ர பிள்ளை எண்டு சோழ மன்னன் பாத்திருந்தா... பசுவுக்கு நீதியுமில்ல.... படிச்சவைக்குப் பாடமுமில்ல....

ஆட்சியில இருக்கிறவருக்கு "ஆமாம்" போட்டு, கூட்டங்களில இருந்து வில்லுப்பாட்டுக்குப் பிற்பாட்டுப் பாடாமல், கூட இருக்கிறவை அவருக்கு கொஞ்சம் விசியங்களைத் தெரியப்படுத்தவும் வேணுமுங்கோ....

அப்பத் தானே ஆராச்சி மணியோசை அந்தாளுக்கும் கேக்கும்....!

*-நரமுனி-*

# காஸாவுக்கு கடல் வழி நிவாரணப் பொருள்கள் சைப்ரஸிலிருந்து நேற்று புறப்பட்டது கப்பல்

போரால் பாதிக்கப்பட்டுள்ள காஸாவுக்கு கடல் வழியாக நிவாரணப் பொருள்களை வழங்கும் திட்டத்தின் முன்னோட்டமாக, சைப்ரஸிலிருந்து உணவுப் பொருள்களுடன் கப்பல் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை புறப்பட்டது.

பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ள காஸா மக்களுக்கு தற்போது தரைவழியாகவும், வான்வழியாகவும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவது போதுமான அளவில் இல்லை என்று விமர்சிக்கப்படுகிறது.

இந்தச் சூழலில், கடல் வழியாக காஸாவுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்ல அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் திட்டமிட்டுவருகின்றன. இதற்காக, காஸா கடலோரப் பகுதியில் தற்காலிக துறைமுகம் ஒன்றை அமைக்குமாறு அமெரிக்க ராணுவத்துக்கு அந்த நாட்டு அதிபர் ஜோ பைடன் கடந்த வாரம் உத்தரவிட்டார்.

இந்தச் சூழலில், பிரபல அமெரிக்க சமையல் கலை வல்லுநர் ஜோஸ் ஆண்டர்ஸின் "வேர்ல்ட் ஃபுட் கிச்சன்' (டபிள்யுசிகே) அறக்கட்டளையால் சேகரிக்கப்பட்ட உணவுப் பொருள்களுடன், ஸ்பெயின் நாட்டின் "ஓப்பின் ஆர்ம்ஸ்' சேவை அமைப்புக்குச் சொந்தமான கப்பல் காஸாவை நோக்கி புறப்பட்டது. அந்தப் பகுதி மக்களுக்காக 200 தொன் தானிய மாப் பொருள்கள், அரசி, புரத உணவுகள், குடிநீர், மருந்துப் பொருள்கள் ஏற்றப்பட்ட சரக்குக் கலத்தை இழுத்துக்கொண்டு, ஐரோப்பிய நாடான சைப்ரஸின் லார்னாகா துறைமுகத்திலிருந்து அந்தக் கப்பல் புறப்பட்டது.

அந்தத் துறைமுகத்திலிருந்து காஸாவுக்கு கடல்வழியாகச் செல்ல 15 மணி நேரம் ஆகும். ஆனால், சரக்குக் கலத்துடன் அந்தக் கப்பல் மணிக்கு 3.7 நொட் வேகத்தில் மட்டுமே செல்வதால் அது காஸா சென்றுசேர மேலும் 2 நாள்கள் ஆகலாம் என்று கூறப்படுகிறது. காஸாவின் எந்தப் பகுதிக்கு அந்தக் கப்பல் கொண்டுவரப்படும் என்ற விவரம் இதுவரை வெளியிடப்படவில்லை.

காஸா மக்களின் உடனடி உணவுத் தேவையின் அவசியத்தை உணர்ந்த ஐரோப்பிய ஆணையம் அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ள வழித்தடத்தில் டபிள்யுசிகே அறக்கட்டளை கப்பல் நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்கிறது.



கடந்த 2005 ஆம் ஆண்டுக்குப்பிறகு ஐரோப்பாவிலிருந்து காஸாவுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்ல ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது இதுவே முதல்முறையாகும். இந்தத் திட்டத்துக்கு ஐக்கிய அரபு அமீரகம் மிகப் பெரிய நிதிப் பங்களிப்பை வழங்கியுள்ளது.

இஸ்ரேல் ராணுவத்தின் அனுமதியுடன் வடக்கு காஸா பகுதியில் கப்பல் நிறுத்துமிடம் ஒன்றை தாங்கள் உருவாக்கிவருவதாகவும், இதற்கான கட்டுமானப் பணியில் அங்கு இஸ்ரேல் தாக்குதலால் சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகளைப் பயன்படுத்திவருவதாகவும் டபிள்யுசிகே அறக்கட்டளை தெரிவித்துள்ளது. இஸ்ரேல் ராணுவத்துடன் அனுமதி பெற்று, மற்ற தொண்டு அமைப்புகளுடன் இணைந்து இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. (04)

## வடக்கு சீனாவில் உணவகத்தில் வெடிவிபத்து 2 பேர் உயிரிழப்பு – 26 பேருக்குக் காயங்கள்



வடக்கு சீனாவின் குடியிருப்பு பகுதியில் உள்ள உணவகத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் பீஜிங்கின் கிழக்கே ஹெபெய் மாகாணத் தில் சான்ஹே நகரின் குடியிருப்புப் பகுதியில் உள்ள உணவகத்தில் காலை 8 மணிக்கு பயங்கர வெடிவிபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த வெடி விபத்தில் 2 பேர் பலியாகியதோடு 26 பேர் காயமடைந்தடைந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

உணவகம் முழுவதும் தீப்பரவியதில் நான்கு மாடிக் கட்டடம் இடிந்து விழுந்துள்ளது.

முதற்கட்ட விசாரணையில் வாயுக் கசிவால் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (04)

## 15 பேருடன் விழுந்து நொறுங்கியது ரஷ்ய ராணுவ போக்குவரத்து விமானம்




15 பேருடன் புறப்பட்ட தங்கள் நாட்டு ராணுவ போக்குவரத்து விமானம் விழுந்து நொறுங்கியதாக ரஷ்ய ராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், செவ்னி விமானத்தளத்திலிருந்து 8 விமானப் பணியாளர்கள் 7 பயணிகளுடன் ராணுவத்துக்குச் சொந்தமான ஐஐ-76 ரக விமானம் செவ்வாய்க்கிழமை புறப்பட்டது. அப்போது அதன் இயந்திரத்தில் தீப்பிடித்ததால் புறப்பட்ட சிறிது நேரத்தில் அது அருகிலுள்ள இவானொவோ விமானதளத்தின் ஓடுபாதையை நோக்கி செலுத்தப்பட்டது. இருந்தாலும், அந்த ஓடுபாதையை அடைவதற்குள்ளாகவே விமானம் கீழே விழுந்து எரிந்தது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விபத்தில் யாரேனும் உயிர்பிழைத்தார்களா என்பது குறித்து ரஷ்ய ராணுவம் தகவல் எதையும் தெரிவிக்கவில்லை. தங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ட்ரோன்கள் மூலம் உக்ரைன் படையினர் தாக்குதல் நடத்தியதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை கூறிய அதே நாளில் இந்த ராணுவ விமானம் விழுந்து நொறுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## ஐசிசியின் சிறந்த வீர, வீராங்கனை விருதுகள் ஜெய்ஸ்வால் – அனபெல் சதர்லான்ட் வெற்றி




சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐசிசி) பெப்ரவரி மாதத்திற்கான சிறந்த வீரர் விருதை இந்தியாவின் இளம் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வாலும், சிறந்த வீராங்கனை விருதை அவுஸ்திரே லியாவின் அனபெல் சதர்லான்டும் வென்றுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை ஒவ்வொரு மாதமும் சிறப்பாக விளையாடும் வீரர் மற்றும் வீராங்கனையைத் தேர்வு செய்து விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது. இந்த நிலையில் பெப்ரவரி மாதத்திற்கான சிறந்த வீர, வீராங்கனை யார் என்ற பரிந்துரைப் பட்டியலை ஐசிசி அண்மையில் அறிவித்திருந்தது.




இதில் ஆடவர் பரிந்துரை பட்டியலில் இந்திய அணியின் யஷஸ்வி ஜெய்ஸ்வால், நியூசிலாந்து அணியின் கேன் வில்லியம்சன் மற்றும் இலங்கை அணிக்காக சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் முதல் முறையாக இரட்டைச் சதம் அடித்து அசத்திய பதும் நிஸ்ஸங்க ஆகியோர் இடம்பிடித்திருந்தனர்.

இந்த நிலையில், வாக்குகளின் அடிப்படையில் பெப்ரவரி மாதத்தின் சிறந்த வீரருக்கான ஐசிசி விருது இந்திய அணியின் இளம் அதிரடி வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வாலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய யஷஸ்வி ஜெய்ஸ்வால் அடுத்தடுத்த போட்டிகளில் இரட்டைச் சதம் விளாசியதுடன் தொடர் நாயகன் விருதையும் வென்றிருந்தார்.

அத்துடன், மொத்தமாக இத்தொடரில் 712 ஓட்டங்களைக் குவித்தார். அதுமட்டுமின்றி இத்தொடரில் மொத்தமாக 26 சிக்ஸர்களையும் ஜெய்ஸ்வால் விளாசி உலக சாதனை படைத்திருந்தார்.

இதனிடையே, வீராங்கனைகளுக்கான ஐசிசி பரிந்துரைப் பட்டியலில் அவுஸ்திரேலிய வீராங்கனை அனபெல் சதர்லான்ட், ஐக்கிய அரபு இராச்சிய அணியின் வீராங்கனைகளான கவிஷா எகொடகே மற்றும் ஈஷா ஓசா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இதில் வாக்குகள் அடிப்படையில் அவுஸ்திரேலிய மகளிர் அணியின் சகலதுறை வீராங்கனை அனபெல் சதர்லான்ட் பெப்ரவரி மாதத்தின் சிறந்த வீராங்கனையாக தேர்வுசெய்யப்பட்டுள்ளார். (04)

# மடத்தடி மீனாட்சியம்மன் மகா சங்காபிஷேகமும் “மரகதம்” வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும்




( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சங்காபிஷேக நிகழ்வும் “மரகதம்” வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 16 ஆம் தேதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

108 சங்காபிஷேக நிகழ்வு ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் முன்னிலையில் காலை 9 மணி முதல் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

அதேவேளை, வரலாற்று பாரம்பரியத்துடன் கூடிய மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கான முதல் வரலாற்று நூலான “மரகதம்” நூல் வெளியீட்டு விழா ஆலய சந்நிதானத்தில் காலை 11 மணிக்கு ஆலய பரிபாலன சபையின் தலைவர் கலாநிதி கி.ஜெயசிறில் தலைமையில்நடைபெற உள்ளது.

ஆலய பரிபாலன சபை ஆலோசகர் உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா தொகுத்து எழுதிய இந் நூல் வெளியீட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அழைக்கப்பட்டுள்ளார்.

முதன்மை அதிதியாக ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும், ஆன்மீக அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், சிறப்பு அதிதிகளாக வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேத.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொள்வார்கள் என ஆலய செயலாளர் த.சண்முகநாதன் தெரிவித்தார்.

அன்றைய தினம் சங்காபிஷேக நிகழ்வு நிறைவு பெற்றதும் அன்னதானம் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் பிரதிகள் பெறுவோர் கலந்துகொண்டு ஆலய வளர்ச்சிக்கு உதவுமாறு அனைவரையும் அழைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# விசேட தேவையுடையோருக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு

(எம் எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவினால் சக்கர நாற்காலி, ஊன்று கோல், நடைச்சட்டம் , கைமிதி வண்டி என 14 உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன..

சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ ஜீ.அர்சாத் தலைமையிலான இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் பீ ரீ எம்.இர்பான் கலந்து கொண்டு இவ்வுபகரணங்களை வழங்கி வைத்தார்.

சமூகசேவைப் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.








# கலாசாலையில் புதன் ஒன்று கூடலில் லண்டன் வைத்திய நிபுணர்களின் உரை



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை புதன்கிழமை ஒன்று கூடல் இன்று புதன் காலை சிரேஷ்ட விரிவுரையாளர் த.தவசேகர் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பக் கல்வி மற்றும் ரோமன் கத்தோலிக்க பாடநெறிகளைச் சேர்ந்த மாணவர்கள் நிகழ்வை முன்னெடுத்தனர்.

ஆரம்பக் கல்வி நெறி ஆசிரிய மாணவி திருமதி ரவிச்சந்திரன் தேவமணி நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

ரோமன் கத்தோலிக்க பாடநெயைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி சுதாகர் கமலினி மாணவர் உரையை வழங்கினார்.

நிகழ்வில் லண்டனில் இருந்து வருகை தந்த சுன்னாகம் கேன் (ஊயுநே) புற்றுநோய் காப்பகத்தின் தலைவர் டொக்டர் கமலா அருணாசலம், மனநல வைத்திய நிபுணர் டொக்டர் சாந்தி பரமேஸ்வரன் அதிதிகளாக கலந்து கொண்டனர். இவர்களுக்கான அறிமுக உரையை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வழங்கினார்

பிள்ளைகளிடையே காணப்படும் பதக்களிப்பை கையாளல் என்ற பொருளில் மனநல மருத்துவர் டொக்டர் சாந்தி பரமேஸ்வரன் கருத்துரை வழங்கினார். டொக்டர் கமலா அருணாசலம் வாழ்த்துரை வழங்கினார்.

அதிதிப் பேச்சாளர்கள் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான மாலைகளை விரிவுரையாளர்களான க.அன்பரசி, பா.சர்மிளா ஆகியோர் அணிவித்தனர்.

# அனர்த்த முகாமைத்துவ பயிற்சி சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு




(எம் எப்.நவாஸ்)

சமூக மட்ட வேலைத் திட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மூலம் பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி. எம்.இர்பான், அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எல்.ஹனீஸ், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸப்பிர், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபர் ஏ.எல்.பாயிஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று. ஒலுவில் மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட 50 இளைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் புற்றுநோய்க்கான 'லீனியர் எக்ஸலேட்டர்' சிகிச்சை இயந்திரங்கள் செயலிழப்பு

## காத்திருப்பு பட்டியல் 4 மாதங்கள் வரை நீண்டுள்ளது

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் இரண்டு 'லீனியர் எக்ஸலேட்டர்' இயந்திரங்கள் செயலிழந்திருப்பதன் காரணமாக கதிரியக்க சிகிச்சைகளுக்காக கிட்டத்தட்ட 4 மாதங்கள் வரை காத்திருப்பு பட்டியல் நீண்டுள்ளதாக கதிரியக்க தொழிநுட்ப வல்லுநர்கள் சங்கம் கூறியுள்ளது.

இந்த இரண்டு இயந்திரங்களும் இரண்டு வாரங்களாக செயலிழந்து கிடப்பதால் கதிரியக்க சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் பெரும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளதாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

ஒரு இயந்திரத்தின் சேவைகள் செயலிழந்த நிலையில் நாளொன்றுக்கு 10 - 15 குழந்தைகளுக்கு கதிர்வீச்சு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், மற்ற இயந்திரத்திலிருந்து வயது முதிர்ந்த நோயாளிகள் சுமார் 70 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் 'சிமியுலேட்டர்' இயந்திரமும் சுமார் 6 மாதங்களாக செயலிழந்துள்ளதாகவும், பராமரிப்பு கட்டணம் செலுத்தப்படாத நிலையில், அந்த வைத்தியசாலையின் நோயாளர்களை மட்டக்களப்பு மற்றும் கராப்பிட்டி வைத்தியசாலைகளுக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும்



சானக தர்மவிக்ரம மேலும் தெரிவித்தார். (ரெம-35)

# வினாக்களையும் கொப்பியடித்த வினாத்தாள் தயாரிப்போர்! உயர்தர தகவல் தொழிநுட்பப் பாடப் பரீட்சையில் விந்தை

## இணையத்திலிருந்து நகலெடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டு

2023 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தகவல் தொழிநுட்பப் பாடத்திற்கான வினாத்தாளின் இரண்டாம் பாகத்திலுள்ள வினாக்களில் ஒன்று இணையத்திலிருந்து நகலெடுக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளதாக குறித்த பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இது சர்வதேச பல்கலைக்கழகங்களில் ஒப்படைகள் தொடர்பாக இணையத்தில் இடம்பெற்றுள்ள ஒரு வினாவாகும். அதே வினா தான் இம்முறையும் வினாத்தாளில் இடம்பெற்றுள்ளதாக ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

கடந்த சில வருடங்களாக இவ்வாறே உயர்தரப் பரீட்சையில் தகவல் தொழிநுட்பம் தொடர்பான வினாக்கள் இணையத்தில் பெறப்பட்டதாகவோ, அல்லது அதே மாதிரியானதாகவோ தயாரிக்கப்படுவது தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகவும் ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வினாக்கள் பாடத்திட்டத்துடன் தொடர்புடையவை அல்ல எனவும் இதனால், இப்பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களும் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களும் மிகவும் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் கூறுகின்ற ஆசிரியர்கள், இணையத்திலிருந்து நகலெடுக்கப்படும் இந்த வெளிநாட்டு வினாக்கள் உள்ளூர் பாடத்திட்டத்துடன் ஒத்துப் போகாததால் உயர்தரப் பரீட்சை வினாத்தாள் சிதைவு நிலையை அடைந்துள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் கல்வி அமைச்சுக்கு எழுத்து மூலம் பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர். (ரெம-36)






## தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம்



(எம் எப். நவாஸ்)

நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே நிறுவனத்தின் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து, அரசு ஏமாற்றி வருகின்றது. எங்களது விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளது அப்பட்டமான உண்மை. இவ்வாறான நிலை நீடிக்குமாக இருந்தால் நாங்கள் தொடர் போராட்டம் ஒன்றுக்கு செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், நேற்று நண்பகல் ஆரம்பித்த திடீர் அடையாள வேலை நிறுத்த போராட்டம் இன்றும் நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் தொடர்கின்றன.

கல்விசார ஊழியர்கள்சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தலைமையிலும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த அடையாள வேலைநிறுத்த போராட்டத்தின் இரண்டாம் நாளிலும் பெரும் அளவிலான ஊழியர்கள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்றும் இடம்பெற்ற இப்போராட்டத்தில் வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத எம். சி.ஏ கொடுப்பனவை வழங்கு - என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இங்கு, ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முழித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம்பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில்! - என்பன போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
DOWNLOAD DRIVER APP
JRide Driver
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
JRIDE TAXI APP
SPEED IT NET
+94 703 563213
www.jride.lk